## தலைப்பு 245 – அரசாங்க நிதி திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 245 – அரசாங்க நிதி திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிதி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க நிதி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில்

தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்கான கட்டுநிதி கோரல் திட்டத்தின் பிரகாரம் கோரப்பட வேண்டிய கட்டுநிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 100.29 மில்லியன் ஆன போதிலும் ரூபா 117.54 மில்லியன் கோரப்பட்டு ரூபா 97.172 மில்லியன் கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | கட்டுநிதி திட்டத்தினை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த திணைக்களம் பொறுப்பேற்கப்பட்டிராததுடன், செலவின விடய இலக்கம் 102-01-02-024-2509 இன் கீழ் ரூபா 253,287,166.67 தொகை 2023 ஜனவரி 25 ஆம் திகதி இந்த திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், 2023 பிப்ரவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலும் செலவினங்களை மேற்கொள்வதற்கு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தினால் திட்டமிடப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட கட்டுநிதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா 17.25 மில்லியன் வேறுபாடு உருவாகி உள்ளது. | கட்டுநிதி கோரல் உரிய முறையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 02 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இல்லாத இருந்த காரணத்தால் ரூபா | திணைக்களத்தின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களால் மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையினை விஞ்சி மேலதிக | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை தயாரித்தல் சரியானதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | 1,150,000 கூட்டுத்தொகை 50 சதவீதம் முதல் 567 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் மாற்றங்கள் மூலம் நிதியேற்பாடு அதிகரிக்கப்பட்டு இருந்தது. | நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றங்கள் மேற்கொள்ள நேர்ந்துள்ளது. | நடைமுறைக்கு சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும். |
| (ஆ) | செலவின விடய இலக்கம் 245-1-1-0-1002 இற்கான மதிப்பிடப்பட்ட ஆரம்ப நிதியேற்பாடு போதிய அளவில் பயன்படுத்தப்படாத காரணத்தால் ரூபா 1,175,000 தொகையான அடிப்படை நிதி ஏற்பாட்டின் 11 சதவீதம் 66/69 மாற்றங்கள் மூலம் நிதி ஏற்பாடுகள் குறைக்கப்பட்டு இருந்தது. | எஞ்சிய நிதியேற்பாட்டினை திணைக்களத்தின் கட்டுப்பாட்டினை மீறிய எதிர்பாராமல் மேற்கொள்வதற்கு நேர்ந்த செலவினங்களை கொள்வதற்காக நிதி பிரமாணம் 66 இன் கீழ் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு 11 செலவின விடயங்களுக்காக 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 106,525,000 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 76,454,182 தொகையானது பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. அது அந்த செலவின விடயங்களின் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 16 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலான கருதி கொள்ளக்கூடிய அளவிலான வீச்சினை கொண்டிருந்தது. | 11 செலவின விடயங்களிடையே 245-1-1-2-2509(11) இலக்கமுடைய செலவின விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 80 மில்லியன் குறை நிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டின் ரூபா 68.36 மில்லியன் இஞ்சி இருந்ததுடன் எஞ்சிய 10 செலவின விடயங்களின் ரூபா 8.09 மில்லியன் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | நிதியேற்பாட்டினை உச்சமாகவும் செயத்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 13 நிதியங்கள் மூடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மூன்று நிதியங்கள் தொடர்பில் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தேசிய தாவரவியல் பூங்கா நிதியத்தை சுயாதீனமானதொரு நிறுவனமாக மீள தாபிப்பதற்கு கோரிக்கை கடிதம் அவ்வப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்து வாகனங்கள் கழிவுப் புகை வெளியேற்ற அவதானிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றினை தொடர்ந்து நடாத்திச் செல்வது பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டமை மீண்டும் சுய தொழில் சுழற்சி நிதியத்தினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் முறையான திட்டங்களை தயாரித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

#### 3.1.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரச நிறுவனங்களுக்கு அரச இலத்திரனியல் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தல் தொடர்பிலான 2018 அக்டோபர் 23 ஆம் திகதிய | அரச இலத்திரனியில் பெறுகை கட்டமைப்பினை அறிமுகப்படுத்தல் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 05/2018 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய 08/2019 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச பெறுகை நிறுவனத்தின் பதிவு, இணைப்பு உத்தியோகத்தர்களின் பதிவு, வழங்குநர்களின் பதிவு, வருடாந்த பெறுகைகள் திட்டத்தினை சமர்ப்பித்தல், பெறுகை அறிவித்தல் வெளியிடுதல், விலை ஒப்பிட்டு முறையில் இலத்திரன்கள் பெறுகைக் கட்டமைப்பினை பயன்படுத்துதல் ஆகிய பணிகள் அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறான போதிலும் திணைக்களத்தினால் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2023 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 1,376,086 கூட்டுத் தொகையான பெறுகை உருப்படிகள் இலத்திரனியில் பெறுகை கட்டமைப்பினை பயன்படுத்தாது விலை ஒப்பிட்டு முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | போதிலும், குறித்த பயிற்சி மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான அறிவுரைகள் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டமையால் 2024 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் திணைக்களத்தினால் இந்த கட்டமைப்பின் ஊடாக கொள்வனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 80 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 11 பதவிகளும் இரண்டாம் நிலை மட்டத்திலான 06 பதவிகளும் ஆரம்ப நிலை மட்டத்திலான 02 பதவிகளும் உள்ளடங்களாக 19 பதவி வெற்றிடங்கள் நிலவின. | இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் சரியானது ஆகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |